இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 26.06.2026

# விஜய் ஆணவம் அடக்கப்பட வேண்டும்!

ஒரு மனிதனுக்கு இவ்வளவு ஆணவம் இருக்கக் கூடாது. ஒவ்வொரு கட்சியின் அலுவலகமாகச் சென்று சீட்டுப் பிச்சை எடுத்து அவர்களைக் காட்டி மெஜாரிட்டி இருப்பதாகச் சொல்லிவிட்டு, இப்போது யார் தயவிலும் நான் ஆட்சியில் இல்லை, மக்கள் தயவால்தான் ஆட்சியில் இருக்கிறேன் என்று முதலமைச்சர் விஜய் சொல்வது ஆணவம் அல்லாமல் வேறு என்ன?

காங்கிரஸ் கட்சியும் விடுதலைச் சிறுத்தைகளும் முஸ்லிம் லீக்கும் அமைச்சர்கள் பதவி பெற்று விட்டார்கள், அதனால் தான் சொல்வதற்கு எல்லாம் ‘ஆமாம் சாமி’ போடுவார்கள் என்பது ஆணவம் அல்லாமல் வேறென்ன?

‘நீங்கள் கேட்டது அமைச்சர் பதவி. இந்தா கொடுத்தாச்சு. அமைதியாக இரு’ என்று சொல்லும் வகையில்தான், ‘உங்கள் தயவால் நான் முதலமைச்சர் ஆகவில்லை’ என்று சொல்வதும். இப்படி ஆணவத்துடன் தமிழ்நாடு சட்டமன்றத்தில் எந்த முதலமைச்சரும் பேசியது இல்லை.

பெரும்பான்மை பலத்துடன் வந்து அமர்ந்த முதலமைச்சர்கள் கூட, சபையில் இருக்கும் கட்சிகளைப் பார்த்து, ‘நீங்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும். நாம் இணைந்து ஆட்சி செய்வோம்’ என்று சொல்வார்கள். ஆனால், துள்ளுகிறார் விஜய். ‘நீயே அயிரை மீன்… உனக்கு ஏன் விலாங்குச் சேட்டை?’ என்று ஒரு பழமொழி உண்டு. அத்தகைய ஆணவமானப் பேச்சு இது.

இவர் போய் கொளத்தூரில் ஐந்து நிமிடம் பேசினாராம். முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தோற்றுவிட்டாராம். பெருந்தலைவர் காமராசர் தோற்றபோது, வருந்தினார் பேரறிஞர் அண்ணா. அந்தப் பண்பை விஜய் போன்ற கெட்ட மதியாளர்களிடம் எதிர்பார்க்க முடியாது. கொளத்தூரில் நன்றி தெரிவிக்கப் போன அவரைப் பார்த்து அந்தத் தொகுதியே அழுதது. அதுதான் உண்மையான செல்வாக்கு ஆகும். விஜய்க்கு ஏன் வோட்டுப் போட்டோம் என்று நித்தமும் இரவில் பெரம்பூர் தொகுதி மக்கள் அழுது கொண்டிருக்கிறார்கள். அதிகமான மின்வெட்டுத் தொகுதி பெரம்பூர்தான். முதலமைச்சர் விஜய் தொகுதி. அதைக்கூட சரி செய்ய துப்பு இல்லாமல் எதற்கு முதலமைச்சர் நாற்காலி? கோட் சூட்?

**‘அப்பா எங்கே என்று தேடுகிறாராம் ஒருவர்’. குட்டிக் கதை சொல்கிறார் விஜய். இதற்குப் பதில் அளிக்கும் வகையில் இணையத்தில், சமூக வலைதளத்தில் பலரும் எழுதியதைப் படித்தால் சட்டசபைக்கே இனி விஜய் வரமாட்டார். கோட்டைப் பக்கமே தலைவைத்துப் படுக்க மாட்டார். இந்த தலையங்கத்தில் மேற்கோள் காட்ட முடியாத வகையிலான பதிலடிக் கேள்விகளை பொதுமக்கள் கேட்கிறார்கள். ‘அப்பா - மகன் பற்றிப் பேச உங்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?’ என்று கேட்கிறார்கள். பதில் வசனம் சொல்ல முடியுமா? சொன்னால் அது அவையையே அசிங்கம் ஆக்கி விடாதா?**

மிகக் கேவலமான சூழலுக்கு தமிழ்நாட்டைக் கொண்டு வந்து விட்ட பாவத்துக்குப் பதில் சொல்ல வேண்டியவர் விஜய்தான்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்துக்கு பதிலுரை தந்த முதலமைச்சர் விஜய், சட்டமன்றத்தை இன்னமும் சினிமா சூட்டிங் போல நினைத்துக் கொண்டு நவரச காட்சிகளை அரங்கேற்றி இருக்கிறார். அவை நாராசமாக இருந்ததே தவிர நன்றாகவும் இல்லை. நியாயமாகவும் இல்லை. அவரது பல பிளாப் ஆன படங்களைப் போலத்தான் அவரது பதில் உரையும் இருந்துள்ளது.

- ★ **மின்வெட்டுக்குப் பதில் இல்லை.**
- ★ **பயிர்க் கடன் ஏமாற்றத்துக்குப் பதில் இல்லை.**
- ★ **பாலியல் வன்கொடுமைகளுக்குப் பதில் இல்லை.**
- ★ **போதை மருந்துகள் அதிகமானதற்குப் பதில் இல்லை.**
- ★ **த.வெ.க. நிர்வாகிகளே குற்றச் சம்பவத்தில் இடம்பெறுவதற்கு பதில் இல்லை.**
- ★ **தூய்மைப் பணியை தனியாருக்குத் தாரை வார்க்கிறார்கள் என்பதற்குப் பதில் இல்லை.**
- ★ **பாலியல் விவகாரத்தில் தொடர்புடைய ஸ்ரீவைகுண்டம் எம்.எல்.ஏ. சரவணன் மீது நடவடிக்கை எடுப்பீர்களா என்ற கேள்விக்குப் பதில் இல்லை.**
- ★ **பள்ளிக் கூடங்களுக்குச் சென்று த.வெ.க. நிர்வாகிகள் ரீல்ஸ் போட்டு வருவதற்குப் பதில் இல்லை.**
- ★ **முதலமைச்சர் நடித்த படங்களில் இருக்கும் ஆபாசமான பாட்டுகளுக்கு மாணவ, மாணவிகள் ஆட வைக்கப்படுவதற்குப் பதில் இல்லை.**
- ★ **முதலமைச்சரின் படம் பள்ளி வகுப்பறைகளில் கட்டாயப்படுத்தி மாட்டப்படுவதற்குப் பதில் இல்லை.**
- ★ **கொடுத்த வாக்குறுதியை எப்போது நிறைவேற்றுவீர்கள் என்ற கேள்விக்குப் பதில் இல்லை.**

- இப்படி எதற்கும் பதில் இல்லை. ஆனால் தன்னை சத்தியசீலனைப் போல, புனிதவானைப் போல நினைத்துக் கொண்டு முதலமைச்சர் விஜய் பேசி இருக்கிறார்.

அவர் மீது செங்கல்பட்டு நீதிமன்றத்தில் அவர் மனைவி தாக்கல் செய்த வழக்கு இருக்கிறது. அவரது மனைவி வைத்த குற்றச்சாட்டுகள் மிகமிகக் கடுமையான குற்றச்சாட்டுகள் ஆகும். வருமான வரி ஏய்ப்பு தொடர்பாக அவர் மீது வழக்கு இருக்கிறது. உயர்நீதிமன்ற விசாரணையில் வருமான வரித் துறையால் உறுதி செய்யப்பட்டவை அவை. கரூரில் சினிமா சூட்டிங் எடுக்க ஏழு மணிநேரம் மக்களை காக்கவைத்து சோறு தண்ணீர் இல்லாமல் துன்புறுத்தி மூச்சுத் திணறி 41 உயிர்களைப் பலி தீர்த்த சம்பவத்தை சி.பி.ஐ. விசாரித்து வருகிறது. சி.பி.ஐ. விசாரணைக்கு சாட்சி சொல்லும் 19 காவலர்களை தமிழ்நாட்டின் வெவ்வேறு ஊர்களுக்கு தூக்கியடித்துள்ளார் உள்துறையை கையில் வைத்துள்ள விஜய். இத்தகைய விஜய் தான் மகா யோக்கியரைப் போல சட்டமன்றத்தில் கொம்பு சுற்றுகிறார்.

குதிரை பேரம் நடத்தி அ.தி.மு.க.வை உடைத்தவர் விஜய். அ.ம.மு.க. உறுப்பினரை தனது கட்சிக்கு மாற்றிக் கொண்டவர் அவர். தி.மு.க. கூட்டணியில் வென்ற கட்சிகளுக்கு அமைச்சர் பதவி தந்து ஆதரவைப் பெற்றவர் அவர். இவை அனைத்தும் அரசியல் பொது ஒழுங்குக்கு முரண் ஆனது ஆகும். இப்படிப்பட்ட விஜய்க்கு அரசியல் நெறிமுறைகளைப் பற்றி பேசுவதற்கு உரிமை உண்டா?

**தி.மு.க. மீது பழிபோட்டு ஆட்சிக் காலத்தை ஓட்டி விடலாம் என்று நினைக்கிறார் முதலமைச்சர் விஜய். இப்போதே நாட்டு மக்கள், அவருக்கு எதிராக கொந்தளித்து வீடியோ போட்டுக் கொண்டுள்ளார்கள். இப்படியே போனால் வீதிக்கு வந்து போராடுவார்கள். அடுத்து விரட்டி அடிக்கப் போகிறார்கள்.**

## அருணாச்சலப் பிரதேசத்தில் தொடர் மழை!

திஸ்பூர், ஜூன் 26–

அருணாச்சல பிரதேசத்தில் பெய்த தொடர் கனமழை மற்றும் திடீர் வெள்ளம் காரணமாக, அசாம் மாநிலத்தில், அம்மாநில அரசு ஹை அலெர்ட் (High Alert) விடுத்துள்ளது. அருணாச்சலப் பிரதேசத்தின் லோயர் சுபன்சிரி (Lower Subansiri) மாவட்டத்தில் மிக கன மழை மற்றும் திடீர் வெள்ளம் ஏற்பட்டதை தொடர்ந்து அசாம் அரசு ஹை அலெர்ட் அதாவது உயர் எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.

ஆறுகளின் நீர்மட்டம் வேகமாக உயர வாய்ப்புள்ளதால், கரையோர மற்றும் தாழ்வான மாவட்டங்கள் மற்றும் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மேலும் தேமாஜி, லக்கிம்பூர், பிஸ்வநாத் மற்றும் சோனித்பூர் உள்ளிட்ட மாவட்டங்களில் பாதிப்புகள் ஏற்பட கூடும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து இந்த பகுதிகளில் பாதுகாப்பு முன்னெச்சரிக்கைக்காக பேரிடர் மீட்புக் குழுக்களான NDRF மற்றும் SDRF தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. அதிக அளவு மழைப்பொழிவின் விளைவாக திடீர் வெள்ளம் மற்றும் மேல் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் ஆற்று நீரின் வெளியேற்றம் கணிசமாக அதிகரித்துள்ளதாக அசாம் அரசு கூறியுள்ளது. மேலும் பாதிக்கப்படக்கூடிய மாவட்டங்களில் உள்ள மாவட்ட நிர்வாகங்கள் தீவிர கண்காணிப்பில் ஈடுபடவும், சரியான நேரத்தில் தடுப்பு மற்றும் உதவி நடவடிக்கைகளை எடுக்கவும் கேட்டு கொள்ளப்பட்டுள்ளதாக அசாம் முதல்வர் ஹிமந்தா பிஸ்வா சர்மா கூறியுள்ளார்.

அருணாச்சல பிரதேசத்தில் பெய்யும் மழைக்கு அசாம் மாநிலம் பாதிக்கப்படுவதற்கு முக்கியக் காரணம் அம்மாநிலத்துன் புவியியல் அமைப்பும் (Geography) மற்றும் ஆறுகளின் தொடர்பும் காரணம் ஆகும். புரியும்படி சொல்வதென்றால் அருணாச்சல பிரதேசம் உயரமான மலைப்பகுதியாகும். அசாம் அதன் கீழே உள்ள சம வெளி பகுதியாகும். இதன் காரணமாகவே, அருணாச்சல பிரதேசத்தில் கனமழை பெய்த உடனே, அசாம் மாநிலத்தின் கரையோர மாவட்டங்களுக்கு முன்னெச்சரிக்கையாக ஹை அலெர்ட் விடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## வாட்ஸ் அப்பில் வலம் வருகிறது!




# கே.என்.நேருவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கூடாது!

## தடையை நீட்டித்து ஐகோர்ட்டு உத்தரவு!

சென்னை, ஜூன் 26-

தி.மு.க.ஆட்சிக்காலத்தில் நகராட்சித்துறை என்ஜினீயர்கள் பணி நியமனத்தில் நடந்த முறைகேடு தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்கில் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு உள்ளிட்டோருக்குஎதிராகநடவடிக்கை எடுக்கக் கூடாது என்ற தடையை நீட்டித்து சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டு உள்ளது.

அதிகாரிகள் நியமனம் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நகராட்சி நிர்வாக துறையில், 2 ஆயிரத்து 538 உதவி என்ஜினீயர்கள், இளநிலை என்ஜினீயர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் நியமனத்துக்கு ரூ.634 கோடி லஞ்சம் பெறப்பட்டு உள்ளதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதுகுறித்து, அமலாக்கத்துறை அனுப்பிய கடிதத்தின் அடிப்படையில், வழக்குப்பதிவு செய்ய லஞ்சஒழிப்புத்துறைக்கு சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டது. இந்த உத்தரவின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்யாததால், லஞ்ச ஒழிப்பு போலீஸ் இயக்குனர் மீது அ.தி.மு.க. எம். பி., இன்பதுரை கோர்ட்டு அவமதிப்பு வழக்கை தாக்கல் செய்தார்.

அதேபோல, வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என்று ஏற்கனவே பிறப்பித்த உத்தரவை மறுஆய்வு செய்யக் கோரி சென்னை ஐகோர்ட்டில், தமிழ்நாடு அரசு, முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு, அவரது தம்பி உள்ளிட்டோர் சார்பில் மனுதாக்கல் செய்யப்பட்டது.

இந்த நிலையில், ஐகோர்ட்டின் உத்தரவின் அடிப்படையில்,



லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இதையடுத்து ஐகோர்ட்டில் என்.நேரு தரப்பில் முறையீடு செய்யப்பட்டது. இதை. ஏற்றுக் கொண்ட ஐகோர்ட்டு, நேற்று முன்தினம் (ஜூன் 23ந்தேதி) வரை எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்று லஞ்ச ஒழிப்பு போலீசாருக்கு தடை விதித்து உத்தரவிட்டது. இந்த நிலைய இந்த வழக்குகள், தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதி காரி, நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் முன்பு நேற்று முன்தினம் மீண்டும் விசார ணைக்கு வந்தது.

அப்போது, அரசு தரப்பில் அட்வகேட் ஜெனரல் விஜய் நாராயண் ஆஜராகி, “லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என்ற உத்தரவை மறு ஆய்வு செய்யக் கோரி கடந்த (தி.மு.க.) ஆட்சியின்போது தமிழ்நாடு அரசு தரப்பில் மனுதாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவை திரும்பப் பெற அனுமதிக்க வேண்டும்” என்று கோரிக்கை விடுத்தார்.

### தடை நீட்டிப்பு

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த கே.என்.நேரு தரப்பு, “ஆட்சி மாறினாலும், முந்தைய அரசு எடுத்த நிலைபாட்டுக்கு மாறாக தற்போதைய அரசு எடுத்துள்ள நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது. பிரதான வழக்கில் எங்கள் தரப்பு விளக்கத்தை கேட்காமலேயே உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. அந்த உத்தரவை மறு ஆய்வு செய்ய வேண்டும்” என்று வாதிடப்பட்டது.

இதையடுத்து, நேரு உள்ளிட்டோரின் மறு ஆய்வு மனுக்கள் மீதான விசாரணையையும், தி.மு.க. ஆட்சியின் போது தாக்கல் செய்த மறுஆய்வு மனுவை வாபஸ் பெற அனுமதி கோரி தற்போதைய அரசு தாக்கல் செய்த மனு மீதான விசாரணையையும் வருகிற ஜூலை 10-ஆம் தேதிக்கு நீதிபதிகள் தள்ளிவைத்து உத்தரவிட்டனர். அதுவரை லஞ்ச ஒழிப்பு போலீசார் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கக் கூடாது என்று ஏற்கனவே விதித்த தடையை நீட்டித்து உத்தரவிட்டனர்.

## எதிர்த்துக் கேள்வி கேட்டால் மிரட்டுவதா? தாக்குதல் நடத்திய

# த.வெ.க.வினர் மீது நடவடிக்கை எடுக்காவிடில் போராட்டம்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி எச்சரிக்கை!



சென்னை, ஜூன் 26-

எதிர்த்து கேள்வி கேட்டால் காவல் துறையை ஏவி தி.மு.க. இளைஞர்களை மிரட்டுவதா என த.வெ.க. அரசுக்கு தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கண்டனம் தெரிவித்துள்ளார். விஜய்யின் இதுபோன்ற பூச்சாண்டிகளெல்லாம் தி.மு.க.விடம் எடுபடாது என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களிடம் பேசிய ஆர்.எஸ்.பாரதி, த.வெ.க. அரசை எதிர்த்து கேள்வி கேட்ட தி.மு.க. இளைஞர் அன்பானந்தன் மீது 5 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து போலீஸார் அராஜகத்தில் ஈடுபட்டுள்ளதாக கண்டனம் தெரிவித்தார்.

சைதாப்பேட்டையில் தி.மு.க. இளைஞர் மீது தாக்குதல் நடத்திய த.வெ.க. வினர் மீது இது வரை வழக்குப்பதிவு செய்யப்படவில்லை என்று அவர் குற்றம் சாட்டினார். தி.மு.க இளைஞர் மீது தாக்குதல் நடத்திய த.வெ.க. வினர் மீது 24 மணி நேரத்திற்குள் நடவடிக்கை எடுக்காவிட்டால் மிகப் பெரிய போராட்டம் நடத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

காவல்துறையை ஏவி தி.மு.க.வின் GenZ இளைஞர்களை அச்சுறுத்தலாம் என்று ஆளும் த.வெ.க. அரசு நினைத்தால், தி.மு.க அதனை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்காது என்றும் ஆர்.எஸ்.பாரதி எச்சரித்தார்.

## மக்கள் பிரச்சினைகள் ஓரங்கட்டல்;

# பேனர் அரசியலில் த.வெ.க. நிர்வாகிகள் மோதல்!

## திருவள்ளூர் அருகே கல்யாணகுப்பத்தில் பெயர் இல்லாததால் வீட்டிற்கே சென்று ரகளை - 3 பேர் மீது போலீசார் வழக்குப் பதிவு!

திருவள்ளூர், ஜூன் 26:

மக்களின் அன்றாட பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதை விட, பேனர்களில் பெயர் மற்றும் புகைப்படம் இடம்பெறுவதை உறுதி செய்வதிலேயே த.வெ.க. நிர்வாகிகள் கவனம் செலுத்துகிறார்களோ என்ற கேள்வியை எழுப்பும் சம்பவம் திருவள்ளூர் அருகே அரங்கேறியுள்ளது.

திருவள்ளூர் அடுத்த கல்யாணகுப்பம் காலனி, பஜனை கோயில் தெருவைச் சேர்ந்த தனுஷ் என்பவர், முதலமைச்சர் பிறந்தநாளை முன்னிட்டு அப்பகுதியில் வாழ்த்து பேனர் வைத்திருந்தார். அந்த பேனரில் த.வெ.க. மேற்கு ஒன்றிய இணைச் செயலாளர் பிரகாஷின் பெயரும், புகைப்படமும் இடம்பெறவில்லை எனக் கூறப்படுகிறது.

இதனால் ஆத்திரமடைந்த பிரகாஷ், முருகேசன் மற்றும் கார்த்திக் ஆகியோர் தனுஷின் வீட்டிற்குச் சென்று விளக்கம் கேட்டதாகவும், அப்போது வீட்டில் தனியாக இருந்த அவரது மனைவி கயல்விழியுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகிறது.

மேலும் தகாத வார்த்தைகளால் பேசியதுடன், கொலை மிரட்டல் விடுத்ததாகவும் கயல்விழி அளித்த புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து புல்லரம்பாக்கம் போலீசார் பிரகாஷ், முருகேசன், கார்த்திக் ஆகிய மூவர் மீதும் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

முதல்வரின் பிறந்த நாளை முன்னிட்டு மக்கள் நலப் பணிகள், நலத்திட்ட உதவிகள் மற்றும் சமூக சேவைகள் நடைபெற வேண்டிய நிலையில், பேனரில் யாருடைய பெயர் இடம்பெற வேண்டும் என்ற விவகாரம் காவல் நிலையம் வரை சென்றிருப்பது அரசியல் வட்டாரங்களில் விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது.

மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் பணிகளை விட, பேனர் அரசியலுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறதா என்ற கேள்வியும் பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளது. பிறந்தநாள் கொண்டாட்டம் என்ற பெயரில் தொடங்கிய நிகழ்வு, வழக்குப் பதிவில் முடிந்திருப்பது த.வெ.க.வின் உள்கட்சி ஒழுங்கு மற்றும் நிர்வாகிகளின் செயல்பாடுகள் குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது.